வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 09.10.2024 புதன்கிழமை | இதழ் : 283 | பக்கங்கள் : 12




## வேட்பாளர்கள் பட்டியலால் தமிழ் அரசுக்குள் குழப்பம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 09

**எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அது குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் அதிருப்தியடைந்துள்ளனர்.**

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தின் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர்கள் அக்கட்சியின் தேர்தல் நியமன குழுவால் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டது.

இதன்படி, யாழ்ப்பாணம் தேத்தல் மாவட்ட வேட்பாளர்களாக சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சி.சி.இளங்கோவன், கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இம்மா னுவல் ஆர்னோல்ட், கிருஷ்ண வேணி சிறீதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இருப்பினும் இந்தப் பெயர்ப்பட்டியலில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் பெயர்கள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. இதனையடுத்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா தமிழ் அரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக ஞாயிற்றுக்கிழமை இரவு அறிவித்தார்.

11

## ஜெனிவா தீர்மானத்துக்கு அரசாங்கம் உடன்படாது!

### அமைச்சரவை பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 09

ஜெனிவாவில் நாட்டுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை விடயத்தில் உள்நாட்டுச் செயன்முறை மூலம் மனித உரிமை பிரச்னைகளை தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும்

11

## யாழிலிருந்து சென்ற சிவில் பொலிஸ் குழுவால் முல்லைத்தீவில் ஒருவர் கைதாகித் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஒக். 09

யாழ்ப்பாணத்திலிருந்து சிவில் உடையில் சென்ற பொலிஸ் குழு ஒன்று முல்லைத்தீவில் ஒருவரை கைது செய்து யாழ்ப்பாணம் கொண்டு வந்ததுடன் அவர்மீது மூர்க்கத்தனமான தாக்குதலையும் மேற்கொண்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கடந்த 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவில் உடையில் சென்ற யாழ்ப்பாணம் மல்லாகத்தில் இயங்கும் விசேட குற்றப் பிரிவுப் பொலிஸார் கொக்குத்

11

## பல இலட்சம் ரூபா பணத்தை தீயில் எரித்தார் குடும்பஸ்தர்

யாழ்ப்பாணம், ஒக். 09

யாழில் பல லட்சம் ரூபா பெறுமதியான நாணயத் தாள்களை தீயிட்டு எரித்த, வீதியில் எறிந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அராலி பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் நேற்று காலை அவரது வீட்டுக்கு முன்பாக ரூபா 10 இலட்சம் பெறுமதியான நாணயத்தாள்களை தீயிட்டு எரித்துள்ளார்.

அதன் பின்னர் வட்டுக்கோட்டையில் உள்ள வங்கிக்கு சென்று அங்கிருந்து ஏழு இலட்சம் ரூபாய் பணத்தினை எடுத்து வந்து வீதியில் எறிந்துள்ளார்.

11

## ஜ. த. தே. கூட்டணியினர் இன்று வேட்புமனு தாக்கல்!

யாழ்ப்பாணம், ஒக். 09


ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி போட்டியிடும் வடக்கு, கிழக்கின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் இன்று புதன்கிழமை வேட்புமனுக்களை தாக்கல் செய்யவுள்ளது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலை புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, ஜனநாயகப் போராளிகள், தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றன.

இந்தக் கூட்டணி திருகோணமலை தவிர, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை தேர்தல் மாவட்டங்களில் தனித்துப்

11

## சீன பாய்மர படை கப்பல் நேற்று கொழும்பு வந்தது



கொழும்பு, ஒக். 09

சீனமக்கள் விடுதலை இராணுவ கடற்படையின் பாரம்பரிய பயிற்சி போர்க் கப்பலான "போ லேங்" நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படையினர், கடற்படையினரின் மரபுகளுக்கேற்ப வரவேற்றனர்.

86 மீற்றர் நீளமுள்ள இப்பாய்மரக்கப்பலில் 130 பணியாளர்கள் பணியாற்றுவடன், இக்கப்பலின் கட்டளை அதிகாரி கொமான்டர்

11


## இலங்கை பொருளாதாரத்தை பலப்படுத்த அமெரிக்கா உதவி

கொழும்பு, ஒக். 09

இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்த தேவையான எந்தவொரு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாரென அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி வர்த்தக பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்கத் தயாரென இலங்கைக்கான

11



## ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு அமெரிக்க ஜனாதிபதி வாழ்த்து



கொழும்பு, ஒக். 09

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால உறவுகளை நினைவு கூர்ந்துள்ள ஜோ பைடன், முழு அமெரிக்க மக்களின் சார்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளதுடன் இலங்கையின் ஜனநாயகத்தை மேலும் பலப்படுத்துவதன் மூலம் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான காலப் பகுதியை அமைதியான முறையில் முன்னெடுத்தமைக்கும் தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

11

## வாசுதேவ அநுர பக்கம்!



கொழும்பு, ஒக். 09

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியாளர் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தமிழ் மக்கள் பொதுச்சபை நடக்கவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் பங்குகொள்ளாமல் இருக்கத் தீர்மானித்திருக்கின்றது. அவ்வாறு தீர்மானிப்பதற்கு அந்த அமைப்புக்கு முழு உரிமையும் இருக்கின்றது என்பதிலும் யாரும் கருத்து வேறுபாடு கொள்ளப் போவதில்லை. ஆனால், அது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கைதான் நமது கவனத்தைப் பெற்றது. அந்த ஊடக அறிக்கையின் முதலாவது பந்தியை முதலில் அப்படியே தருகின்றோம்.

"தமிழ் மக்கள் பொதுச்சபை ஈழத்தமிழ் மக்களின் விடிவை நோக்கிய பயணத்துக்கும் மக்களை ஒன்று திரட்டி ஒருங்கிணைக்கும் தொலைநோக்குடன் உருவாகியது. அது தன்னைப் போதியளவில் ஒழுங்கமைத்து வலுவூட்டி விரிவாக்குவதற்கு முன்னரேயே மிகக்குறுகிய காலத்தில் அறிவிக்கப்பட்ட சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலை ஈழத்தமிழ் மக்களை ஒருங்கிணைக்கும் பரீட்சார்த்த களமாகக் கையாள்வதற்கு முன்வந்தது."

அவர்கள் சொல்லவருவது, தாங்கள் மக்களை ஒன்று திரட்டி ஒருங்கிணைக்கும் தூரநோக்குடன் பொதுச் சபையை உருவாக்கினார்களாம். அதன் பின்னரே மிகக்குறுகிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதாம்.

சாதாரண அரசியல்வாதிகள் போல அவர்களும், அதாவது சிவில் அமைப்புகளும் மக்கள் பழையவற்றை மிக இலகுவாக மறந்துவிடுவார்கள் என்று நம்புகின்றார்களோ தெரியவில்லை.

ஜனாதிபதி தேர்தல் நடக்குமா நடக்காதா என்பது நீண்டகாலமாகவே கேள்விக்கு உரியதாக இருந்துவந்தபோதிலும், அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஏதேனும் 'மந்திரவித்தைளை' காட்டாவிட்டால், செப்ரெம்பரில் தேர்தல் நடந்துதான் ஆகவேண்டும் என்பது அரசமைப்பின் பிரகாரம் நடக்கவேண்டியதுதான்.

அதனால்தான், கடந்த பத்தொன்பது தேர்தலில் கடைசி நேரத்தில் தமிழ் மக்கள் பேரவை, தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்கு முயன்று தோற்றுப்போனது போல அல்லாமல், இந்தத் தடவை அதனை செயலுருவாக்க வேண்டும் என்று மக்கள் மனு வடக்கு, கிழக்கு சிவில் சமூகம் அதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியது. ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியும் அதன் அவசியத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது.

மக்கள்மனு சிவில் சமூகம் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு என்று மூன்று இடங்களிலும் கருத்தரங்குகளை நடத்தி அதற்கு மக்களின் ஆதரவு இருப்பதை அறிந்து செயல்பட்டுக்கொண் டிருக்கும்போதே, வவுனியாவில் கூடிய சிவில் சமூகங்களும் பொது அமைப்புகளுமாக முப்பதுக்கும் அதிகமான அமைப்புக்கள் சேர்ந்து பொதுச்சபையை உருவாக்கின.

அதாவது அந்த அமைப்பு தொடங்கப்பட்டதே ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்தத்தான் என்பது சாதாரண மக்களுக்கும் தெரிந்ததுதான்.

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை களம் இறக்குவதன் மூலம் மக்களை தேசமாக அணிதிரட்டலாம் என்பது அதன் பிரதான இலக்காக இருந்தது என்பதும் விவாதத்துக்குரியதல்ல.

ஆனால், பொதுச்சபையின் அறிக்கையில் சொல்லப்பட்டது போல, பொதுச் சபையை உருவாக்கிய பின்னர்தான், குறுகிய காலத்தில் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது என்பதல்ல.

இங்கே எம் மத்தியில் எழுகின்ற கேள்வி:

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் என்ற ஆயுதத்தை பயன்படுத்தி தமிழ் மக்களை தேசமாக திரட்டுவதற்கு முன்வந்த பொதுச்சபை, அவ்வாறு திரட்டிய மக்களை அடுத்து எப்படி வழி நடத்துவது என்பதைப்பற்றி யோசிக்காமல் விட்டது எதற்காக என்பதுதான் புரியமுடியாததாக இருக்கின்றது.

அதைவிட முக்கியமானது, இந்த ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி ரணில விக்கிரமசிங்க வெற்றிபெற்றிருந்தால் மாத்திரமே, பாராளுமன்றம் சில வேளைகளில் கலைக்கப்படாமல் இருந்திருக்கலாம். அல்லாமல் சஜித் பிரேமதாஸவோ, அநுர குமார திஸநாயக்காவவோ வெற்றி பெற்றால் பாராளுமன்றத்தை நிச்சயம் கலைத்து தேர்தல் ஒன்றை நடத்துவார்கள் என்பதும் சிறுபிள்ளைக்கும் தெரிந்த சங்கதி.

அப்படியிருக்கையில், ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளரை களம் இறக்கி, தேசமாக தமிழ் மக்களை திரட்ட நினைத்த பொதுச்சபை, திரட்டிய மக்களை மீண்டும் "அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டைபோல" அவிழ்த்துவிட்டு இன்று ஒரமாக ஒதுங்கியிருப்பது எதனால் என்பதுதான் புரியவில்லை.

மக்கள் மனு சிவில் சமூகம் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது எப்படி என்ற தலைப்பில் முதலாவது கருத்தமர்வை நடத்திய போது, அதிலே பேச்சாளராக கலந்துகொள்ளுமாறு விடுத்த அழைப்பை பொதுச் சபையின் முக்கிய பிரமுகர் ஒருவர் மறுத்திருந்தார். அதற்கு அவர் சொன்ன காரணம், ஒரு குறிப்பிட்ட புலம்பெயர் வர்த்தகர், பொதுவேட்பாளரை களம் இறக்கினால், சஜித் பிரேமதாஸவின் வெற்றியை அது தடுத்துவிடும் என்பதால் அப்படி செய்யவேண்டாம் என்று விரும்புகிறார், அதனால் நான் அந்த கருத்தமர்வில் பேசமுடியாது."

இப்போதும் யாராவது பாராளுமன்றத் தேர்தலில் கலந்து கொள்ளவேண்டாம் என்று கோரிக்கை விடுத்தார்களோ தெரியவில்லையே.!

- ஊர்க்குருவி.

# யாழ்.நோக்கி பயணித்த பஸ்கள் மீது கிளிநொச்சியில் வைத்து தாக்குதல்!

கிளிநொச்சி, ஒக். 09

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பஸ்கள் மீது கற்கள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் பஸ்ஸின் கண்ணாடி உடைந்த நிலையில், அதன் சாரதி காயமடைந்தார்.

வெவ்வேறு பகுதிகளில் வைத்து மூன்று பஸ்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து யாழ் சென்ற தனியார் அதிசொகுசு பஸ் மீதும், பதுளையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ் மீதும் கிளிநொச்சியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பதுளை - யாழ்ப்பாணம் பஸ், பரந்தன் பகுதியில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது.

எனினும் இந்தத் தாக்குதல்களுக்கான காரணம் தொடர்பில் இதுவரை கண்டுபிடிக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

வீட்டை எரித்து ஆசிரியருக்கு அச்சுறுத்தல்

# தீரவு கோரி போராட்டத்தில் வித்தியானந்த ஆசிரியர்கள்



முல்லைத்தீவு, ஒக். 09

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி பாடசாலை ஆசிரியர்களால் கறுப்புபட்டி அணிந்து கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று மேற்கொள்ளப்பட்டது.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி பாடசாலை ஆசிரியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளும் தங்கியிருந்த வீடும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் எரிக்கப்பட்டிருந்தது.

ஆனால், முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டவில்லை.

எனவே குறித்த விசாரணையை துரிதப்படுத்தி குற்றவாளியை கைது செய்யுமாறும், ஆசிரியருக்கு நியாயமான தீர்வு வழங்க வேண்டும், தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்து வித்தியானந்தா கல்லூரி பாடசாலை ஆசிரியர்கள் நேற்றுக் காலை 8.00 மணி தொடக்கம் 8.25 மணி வரை பாடசாலை வாயிலில் கையில் கறுப்புப்பட்டி அணிந்து கல்விக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# மாணவியிடம் நகை பறிப்பு

முல்லைத்தீவு, ஒக். 09

தனியார் வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி ஒருவரின் நகை அறுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு - முள்ளியவளை நகரப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வட்டுவாகல் பகுதியில் இருந்து முள்ளியவளை நகரத்துக்கு வகுப்புக்காக உயர்தர மாணவி ஒருவர் சென்றுள்ளார்.

வகுப்பு நிறைவடைந்ததைத் தொடர்ந்து, வீடு செல்வதற்காக பேருந்து தரிப்பிடம் நோக்கி நடந்து சென்றபோது முள்ளியவளை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மாணவி கழுத்தில் அணிந்திருந்த தங்க நகையை பறித்துக்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

(ஐ)

# சுற்றுச்சூழல் குறித்த கட்சிகளின் திட்டங்களை தேர்தல் அறிக்கைகளில் உள்ளடக்க வேண்டும்

தேர்தல்கள் ஆணையத்திடம் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 09

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளைத் தேர்தல் அறிக்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான அவற்றின் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்குமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலங்கைத் தேர்தல்கள் ஆணையத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சியின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

உலகம் இன்று எதிர்நோக்கும் தலையாய பிரச்னைகளில் காலநிலை மாற்றமும் இதர சுற்றுச்சூழல் பிரச்னைகளும் முதலிடத்தில் உள்ளன. நாடுகளில் நிலவும் வளப்பற்றாக் குறைவு, வறுமை, பஞ்சம், பட்டினி போன்றனவற்றின் அடிப்படைக் காரணங்களாகவும் இவை உள்ளன.

காலநிலை மாற்றங்களுக்கும் ஏனைய சுற்றுச்சூழல் பிரச்னைகளுக்கும் நாடு எவ்வாறு முகங்கொடுக்க வேண்டும் என்பது தொடர்பாகத் திட்டங்களை வகுக்கவும், அவற்றை நிறைவேற்றவும் வேண்டிய கடப்பாடு அரசாங்கங்களுக்கே உரியதாகும். இவை தொடர்பாக ஏற்கனவே உலக நாடுகள் பலவும் விழிப்புணர்வு பெற்று வினைத்திறனுடன் செயலாற்ற தொடங்கியுள்ளன.

இலங்கையும் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் உட்பட பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்னைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. அந்த வகையில், தேர்தல்களை நடத்துகின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள இலங்கைத் தேர்தல்கள் ஆணையம் கட்சிகளுக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றது.

தேர்தல் பொதுக்கூட்டங்களில் பிளாஸ்ரிக் கொடிகளையும், ஒருநாள் பாவித்து விட்டு வீசும் பிளாஸ்ரிக் குவளைகளையும் அறவே தவிர்க்குமாறு இறுக்கமாக அறிவுறுத்த வேண்டுமென்றும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Eelanadu
09.10.2024 புதன்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அநுரவிடமிருந்து நீதி

ஐக்கிய நாடுகள் சபையின் 57ஆவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. பேரவையால் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பான உத்தேச வரைவை அநுர அரசாங்கம் நிராகரித்திருக்கின்றது. வெளிச்சாட்சியங்கள் திரட்டும் பொறிமுறையை அனுமதிக்க முடியாதென்று கூறியுள்ள அரசாங்கம், உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொறிமுறையை ஆதரிப்பதாக அறிவித்திருக்கின்றது. அநுர அரசாங்கத்தின் அணுகுமுறை ராஜபக்ஷக்கள் கடைப்பிடித்த அணுகுமுறைக்கு ஒப்பானது. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லைத்தான். ஏனெனில், இலங்கைமீதான சர்வதேச அழுத்தங்களை கையாளும் விடயத்தில் அநுர எந்தவொரு புதிய அணுகுமுறையையும் கைக்கொள்ள போவதில்லை என்பதைத்தான் இந்த முடிவு காண்பிக்கின்றது.

இதில், ஆச்சரியப்பட ஏதும் இருப்பதாக ஈழநாடு கருதவில்லை - ஏனெனில், அநுரவின் அரசியல் பாரம்பரியத்திலிருந்து நோக்கினால், அவரால் இவ்வாறானதோர் அணுகுமுறையைத்தான் கடைப்பிடிக்க முடியும். ஒருவேளை, சிலர் வாதிடலாம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றாலும்கூட அநுரவின் அணுகுமுறையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது. இதனை இரண்டு கோணத்தில் நோக்க வேண்டும் - அதாவது, இலங்கையின் வெளிவிவகார கொள்கையின் வழியாக நோக்க வேண்டும் - அடுத்தது, ஒரு குறிப்பிட்ட அரசாங்கத்தை வழிநடத்துபவர்கள் எவ்வாறான அரசியல் பாசறையில் புடம்போடப்பட்டவர்கள் என்பதை ஆராய வேண்டும்.

இலங்கையின் வெளிவிவகார கொள்கை இரண்டு வகையில் அணுகப்படுகின்றது. ஒன்று, வலதுசாரி பின்புலம் கொண்டவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோது, அவர்களின் அணுகுமுறை மேற்குலகு சார்பான கொள்கை நிலைப்பாடுடையதாக இருப்பதுண்டு. அதே வேளை, இடதுசாரி பின்புலம் கொண்ட அல்லது மேற்குலகு சார்பற்ற அரசாங்கங்கள் அமைகின்றபோது அவர்களின் வெளிவிவகார அணுகுமுறை சற்று வேறுபட்டதாக அமைந்திருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருக்கின்றபோது அவர்களது அணுகுமுறை ஒருவாறு இருக்கும். அதேபோன்று, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருக்கின்றபோது, அவர்களது சர்வதேச அணுகுமுறை வேறுவிதமாக அமைந்திருக்கும். கடந்தகால அனுபவங்களிலிருந்து இதனை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இதேபோன்று, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விவகாரங்களில், அதற்கான ஒப்பந்தங்களின் வரலாற்றை எடுத்துநோக்கினால், அனைத்துமே மேற்குலக சார்பான ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில்தான் இடம்பெற்றிருக்கின்றது. சிறீ லங்கா சுதந்திர கட்சியின் காலத்தில் ஒரு போதுமே இவ்வாறான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டதில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், அநுரவின் அரசியல் பின்புலத்தின் அடிப்படையில் நோக்கினால், அவரால் ஒருபோதுமே மனித உரிமை சார் மேற்குலக அழுத்தங்களுடன் ஒத்துப்போக முடியவே முடியாது. இந்த விடயத்தில் அவரின் அணுகுமுறையும் ராஜபக்ஷக்களின் அணுகுமுறையும் ஒன்றுதான் - ஏனெனில், இது அவர்கள் எங்கு அரசியலை கற்றுக்கொண்டார்கள் என்பதிலிருந்தே நோக்கப்பட வேண்டியது.

அநுரவின் உள்ளக அரசியல் அணுகுமுறையும் வெளியுறவுசார் புரிதலின் அடிப்படையிலும் ஒருபோதுமே இது சாத்தியப்படாது. எனவே, அநுரவின் அரசாங்கத்திடம் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல் தொடர்பிலும் நீதியை எதிர்பார்க்க முடியாது. அநுரவின் தென்னிலங்கை ஆதரவுத் தளமும் அநுரவின் அரசியல் கற்கையும் அதற்கான வாய்ப்பை ஒரு போதுமே வழங்காது.

## தேர்தல்கள் ஆணையாளர் யாழ்ப்பாணத்துக்கு வருகை



*யாழ்ப்பாணம், ஒக். 09*

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். இதன்போது, அவர் யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபனை சந்தித்து கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் தற்போதைய வேட்புமனு கையேற்றல் தொடர்பாகவும் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல்கள் தொடர்பாக யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

இக் கலந்துரையாடலில் தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளார் எஸ். அச்சுதனும் பங்கேற்றார். (ஐ)

## வட்டு. இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்று!



*யாழ்ப்பாணம், ஒக். 09*

வட்டுக்கோட்டை இந்து கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவுநாளும் நேற்று செவ்வாய்க்கிழமையின் கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியில் அமைந்துள்ள சரஸ்வதி சிலைக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், தொடர்ச்சியாக தேசியக் கொடி, பாடசாலைக் கொடி என்பன ஏற்றி வைக்கப்பட்டன. தொடர்ந்து விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனம், ஆசியுரை, தலைமையுரை, விருந்தினர்கள் உரை, மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரிசில்கள் வழங்கல் என்பன நடைபெற்றன.

கல்லூரியின் முதல்வர் லங்கா பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உயர் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக திருகோணமலை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் நே. விஷ்ணுதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிறுவுநர் நினைவு பேருரையை கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் நா. அம்பிகைபாகன ஆற்றினார்.

(ஐ- 05)

## யாழ். பல்கலையில் நினைவு பேருரை

*யாழ்ப்பாணம், ஒக். 09*

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மொழியியல் ஆங்கிலத் துறை நடத்தும் பேராசிரியர். சு. சுசீந்திரராஜா நினைவுப் பேருரை நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 09.30 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'கணினி மொழியியலின் இன்றைய வளர்ச்சியும் தமிழும்' எனும் தலைப்பில் சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரும் மிகச் சிறந்த மொழியியல் அறிஞருமான ந.தெய்வசுந்தரம் கலந்து கொண்டு நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (ஐ)

## யாழ். பல்கலையில் புத்தக கண்காட்சி


*யாழ்ப்பாணம், ஒக். 09*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் நேற்று செவ்வாய்க்கிழமையும் ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு சிறப்பாக நடைபெற்றது. இதன் ஒருகட்டமாக எங்கட புத்தகங்கள், ஜீவநதி பதிப்பகம், மொழி பதிப்பகம் ஆகியவற்றின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெற்றது.

ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள் மற்றும் ஈழத்துச் சஞ்சிகைகள் குறித்த கண்காட்சியில் இடம்பெற்றிருந்த நிலையில் நூற்றுக்கணக்கானவர்கள் இக் கண்காட்சியை ஆர்வத்துடன் பார்வையிட்டனர். புத்தகக் கண்காட்சியில் அனைத்துப் புத்தகங்களுக்கும் இருபது வீத விசேட விலைக்கழிவு வழங்கப்பட்டமையால் இரு தினங்களும் புத்தகங்களின் விற்பனையும் சூடுபிடித்திருந்தது. (ஐ)



## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

**இடபம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாருடன் வீண்விவாதம் வந்து போகும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

**தனுசு**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் விவாதம் வேண்டாம்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். மதிப்புக் கூடும் நாள்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மதிப்பு உயரும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். புது அத்தியாயம் தொடங்கும்.

# மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்க யாழில் பிரதேச செயலர்களுக்கு அழுத்தம்

## வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 09

இடமாற்றம் செய்யப்பட்டுள்ள கலால் வரி திணைக்கள ஆணையாளர் இடமாற்றத்தில் செல்லாமல், மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்குமாறு பிரதேச செயலர்களை எச்சரித்து வருவதாக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் செயலாளர் செல்லையா குமாரசிங்கம் குற்றஞ்சாட்டிள்ளார்.

சங்கானையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"சங்கானையில் புதிதாக ஒரு மதுபானசாலையை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டது. இந்த விடயம் எமக்குத் தெரிய வந்த நிலையில் கடந்த மூன்றாம் திகதி சர்வதேச நல்லொழுக்க தினத்தன்று சங்கான்னை பேருந்து தரிப்பு நிலையத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தோம்.

இது இவ்வாறு இருக்கையில்



கொழும்பு மதுவரித்திணைக்கள ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களான சங்கானை, கோப்பாய், தெல்லிப்பழை, கரவெட்டி மற்றும் நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளார். அதில் மதுபானசாலைகளுக்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும். அல்லது உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச செயலர்களுக்கு கடிதம் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த கடிதம் தனிச் சிங்களத்திலேயே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கலால் திணைக்கள ஆணையாளருக்கு இடமாற்றம் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் அவர் அந்த பதவியை விட்டு போகின்றார் இல்லை. எனவே, உடனடியாக கலால் திணைக்கள ஆணையாளரின் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தி, இவ்வாறான மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்ய வேண்டும்"- என்றார். (எ-05)

# "வன்னியில் இரண்டு ஆசனங்களை ஈ. பி. டி. பி. நிச்சயம் கைப்பற்றும்"

வவுனியா, ஒக். 09

வன்னித் தேர்தல் தொகுதியில் இரண்டு ஆசனங்களையும் யாழ். தேர்தல் தொகுதியில் மூன்று ஆசனங்களையும் நிச்சயம் கைப்பற்றுவோம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்தார்.

வன்னித் தேர்தல் தொகுதிக்கான வேட்பு மனுவை வவுனியா தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்தில் தாக்கல் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈ. பி. டி. பிக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பிருக்கிறது. எமக்கு தொலைபேசியிலும் நேரிலும் மக்கள் வாழ்த்துகளை தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

நாம் பல அபிவிருத்தித் திட்டங்களை இந்த பிரதேசங்களில் மேற்கொண்டுள்ளோம். அதன் பிரதிபலிப்பாக எமக்கு இரண்டு ஆசனங்கள் இம்முறை வன்னித் தேர்தல் தொகுதியில் நிச்சயம் கிடைக்கும்.

அதேபோன்று யாழ். தேர்தல் தொகுதியில் மூன்று ஆசனங்களை நாங்கள் கைப்பற்றுவோம். இதன் மூலமாக மக்களுக்கான அபிவிருத்தியை முன்னெடுப்போம்"- என்றார். (எ)

# ரெலோ சார்பில் மயூரன் போட்டி



வவுனியா, ஒக். 09

வன்னித் தேர்தல் தொகுதியில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிடுவதற்கு ரெலோ சார்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரனை களமுறக்கியுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

# தமிழ் அரசின் வேட்பாளராக போட்டியிட விரும்பவில்லை

## சட்டத்தரணி தனஞ்சயன் மறுப்பு

முல்லைத்தீவு, ஒக். 09

"கடந்த சில நாட்களாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்ந்து நடைபெறுகின்ற சங்கடம் தரும் விடயங்கள் அந்தக் கட்சி ஊடாக பயணிப்பதன் மூலம் எங்கள் மக்கள் சார்ந்து எதிர்காலத்தில் பணியாற்ற முடியுமா? என்ற கேள்வியை எனக்குள் எழுப்பியுள்ளது. எனவே, அந்தக் கட்சி சார்பில் போட்டியிட விரும்பவில்லை"- இவ்வாறு முல்லைத்தீவில் தமிழர்களின் உரிமை சார்ந்த பல வழக்குகளில் முன்னிலையாகும் சட்டத்தரணி வீ. எஸ். எஸ். தனஞ்சயன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியில் இம்முறை இளம் வேட்பாளராக போட்டியிடுவார் என பலராலும் எதிர்பார்க்கப்பட்ட சட்டத்தரணி தனஞ்சயன் தனது சமூக வலைத்தளத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

"2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுமாறு பல்வேறு கட்சிகளாலும் சுயேச்சைக்குழுக்களாலும் எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அந்த அடிப்படையில் தமிழ் அரசுக்கட்சியின் ஊடாக வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருந்தேன்.

ஆயினும் நான், தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிடுவது தொடர்பில் என்னுடைய நண்பர்களுடனும் நலன்விரும்பிகளுடனும் கலந்துரையாடிய போது, பலர் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் அரசுக்கட்சியில் போட்டியிட வேண்டாம் என ஆலோசனை வழங்கியிருந்தனர் என்பதுடன் நான், தமிழ் அரசுக்கட்சியில் போட்டியிடுவதானது உண்மையான தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்தும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

கடந்த சில நாட்களாக அந்தக் கட்சி சார்ந்து நடைபெறுகின்ற சங்கடம் தரும் விடயங்கள் அந்தக் கட்சி ஊடாக பயணிப்பதன் மூலம் எங்கள் மக்கள் சார்ந்து எதிர்காலத்தில் பணியாற்ற முடியுமா? என்ற கேள்வியை எனக்குள் எழுப்பியுள்ளது.

நான் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாவிட்டாலும், மக்கள் சார்ந்த பணியில் முடிந்த அளவுக்கு கடந்த காலங்களில் பணியாற்றியிருக்கிறேன். தொடர்ந்தும் பணியாற்றுவேன். என்னுடைய மக்கள் சார்ந்த பணிக்கு உங்கள் ஒத்துழைப்புக்களை தொடர்ந்தும் வழங்குவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்"- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை குறைப்பின் பயன்கள் நுகர்வோரை அடைவதில்லை

## நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம்

**கொழும்பு, ஒக். 09**

**அரசாங்கம் சில பொருட்களுக்கான விலையை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளபோதிலும் அதன் பயன் நுகர்வோரை சென்றடைவதில்லை என தேசிய நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதான தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது அரசாங்கம் வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால் அந்த பொருட்களின் விலை குறைப்பின் பயன் மக்களைச் சென்றடைவதாக தெரியவில்லை.

முட்டை விலை ஒரு வார காலத்துக்கு குறைந்திருந்தாலும் கூட தற்போது சந்தையில் முட்டை விலை அதிகரித்துள்ளது. அதேபோன்று முட்டை விலை குறைக்கப்பட்டாலும் கூட சலுகை விலையில் நுகர்வோரால் முட்டையை பெற்றுக் கொள்ள முடியாத நிலையே காணப்பட்டது.

ஹோட்டல் உரிமையாளர் மற்றும் பேக்கரி உரிமையாளர் பழைய விலைக்கே பொருட்களை விற்பனை செய்கின்றனர். பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டாலும் அந்த விலைகுறைப்பு நுகர்வோரை சென்றடைவதில்லை.

இது தொடர்பில் கண்காணிக்க நுகர்வோர் அதிகார சபை உள்ளது. ஆனால் நுகர்வோர் அதிகார சபைக்கு தலைவர் இல்லை. இத்தகைய பின்னணியில் அரசாங்கம் வழங்கும் நிவாரணம் நுகர்வோரை சென்றடைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆகவே அரசாங்கம் இந்த விடயத்தில் தலையீட்டை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்- என்றார். (அ)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டி

கொழும்பு, ஒக். 09

புதிய ஜனநாயக முன்னணி என்ற கூட்டணியில் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

60 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை நாம் எதிர்வரும் பொதுத்தேர்தலை இலக்காக கொண்டு உருவாக்கியுள்ளோம்.

அந்த வகையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் எம்முடைய முன்னணி புதிய ஜனநாயக முன்னணியுடன் கூட்டணி அமைக்கவுள்ளது. இந்த கூட்டணி காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

அந்த வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட கட்சிகள் ஒன்றிணைந்து புதிய ஜனநாயக முன்னணியுடன் கைகோர்த்து பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளோம்.

அதேபோன்று எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மகாணசபை தேர்தல் என்பவற்றில் இந்த கூட்டணி தனியாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியாக விருது சின்னத்தில் போட்டியிட எதிர்பார்த்துள்ளது.

முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலேயே நாம் புதிய கூட்டணியை அமைத்துள்ளோம். முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் எமக்கான ஆதரவை வழங்க வுள்ளனர். ஆகவே பொதுத்தேர்தலில் வெற்றியை சுவீகரித்துக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கின்றோம்-என்றார். (அ)

# தேர்தலில் போட்டியிடும் வாய்பை இழந்துள்ள 6 அரசியல் கட்சிகள்!

கொழும்பு, ஒக். 09

செயலாளர் பதவியில் பிரச்னைகள் காணப்படும் 6 அரசியல் கட்சிகள் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழந்துள்ளன.

அந்தவகையில் 77 அரசியல் கட்சிகளுக்கு மாத்திரமே தேர்தலில் போட்டியிட வாய்ப்பு உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நவம்பர் 14ஆம் திகதி நடைபெற உள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடக்கூடிய அரசியல் கட்சிகள் மற்றும் அதற்கென ஒதுக்கப்பட்ட சின்னங்களை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய லங்கா மகாசபா கட்சி, ஐக்கிய லங்கா பொதுஜன கட்சி, லங்கா மக்கள் கட்சி, இலங்கை முற்போக்கு முன்னணி மற்றும் ஈழவர் சனநாயக முன்னணி ஆகிய கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிட முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தலில் தபால் வாக்களிப்புக்கு 55,643 பேர் தகுதி

கொழும்பு, ஒக். 09

எல்பிட்டி பிரதேச சபை தேர்தலின் தபால் மூல வாக்களிப்பிற்காக 55 ஆயிரத்து 643 பேர் தகுதி பெற்றுள்ளதாக காலி மாவட்ட செயலாளர் டபள்யு. ஏ.தர்மசிறி தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகளுக்கான தயார்ப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன.

55 ஆயிரத்து 643 பேர் தபால் மூல வாக்களிப்பிற்கு தகுதி பெற்றுள்ளனர். அந்த வகையில் தபால் மூலவாக்களிப்பு நடவடிக்கைகள் இம்மாதம் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. 47 வாக்கெடுப்பு நிலையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

வாக்கெடுப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்தமையை தொடர்ந்து வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நள்ளிரவாகும்போது எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான முடிவுகளை வெளியிட முடியுமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது-என்றார். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளுக்கு முழுமையான ஆதரவு வழங்கத் தயார்!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 09

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

விசாரணைகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவை வழங்கும் என கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்னமும் நீதிகிடைக்கப்பெறாத பாரிய அழிவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலாகும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியினருக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என அறிந்து கொள்ள வேண்டிய தேவைப்பாடே உள்ளது. அரசியல் சூழ்ச்சி இடம்பெற்றதா என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகவுள்ளது.

சஜித் பிரேமதாஸ ஆட்சிக்கு வந்தால் இந்த விடயம் தொடர்பில் முன்னெடுக்க விசேட திட்டத்தை திட்டமிட்டிருந்தோம். அதுவும் சர்வதேச அதிகாரங்களையும் இணைத்துக்கொண்டு விசாரணைகளை துரிதப்படுத்தவே எதிர்பார்த்திருந்தோம்.

இந்நிலையில் மக்கள் அநுரகுமார திஸாநாயக்க அணியினருக்கு வாக்களித்துள்ளனர். இத்தகைய பின்னணியில் அநுரகுமார ஜனாதிபதி தலைமையிலான அணியினருக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய விசாரணைகளின்போது முழுமையான ஆதரவை வழங்கத் தயாராகவுள்ளோம்.

இந்த விடயம் தொடர்பில் துரிதமாக விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். -என்றார். (அ)

ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பாக

# வேட்புமனுத் தாக்கல் செய்பவர்களுக்கு எதிரான ஆட்சேபனைபற்றி ஆராய குழு!

கொழும்பு, ஒக். 09

ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பாக வேட்புமனுத்தாக்கல் செய்பவர்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் ஆட்சேபனைகள் பற்றி ஆராய விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகச் செயளாளர் ஏரானந்த ஹெட்டியாராச்சியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பாக வேட்புமனுத் தாக்கல் செய்ய முன்வந்துள்ள நபர்களுக்கு பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வரும் ஆட்சேபனைகள் முன்வைக்கப்படுகின்றன.

ஆகவே இதில் எழுந்துள்ள பிரச்னைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அறிவுறுத்தலின்படி, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான தினால் பிலிப், நளின் திசாநாயக்க மற்றும் எஸ்.டி. ஜயநாத ஆகியோரும் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக் குழுவின் அறிக்கையை உடனடியாக கட்சியின் வேட்புமனு குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் மின்சார ஒழுக்கு காரணமாக தீ பரவியது!

யாழ்ப்பாணம், ஒக். 09

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் மின் ஒழுக்கினால் ஏற்பட்ட தீ பரவல், துரித செயல்பாட்டின் மூலம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

பருத்தித்துறையில் அமைந்துள்ள வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் மாலை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான வழக்கமான வாராந்த கலந்துரையாடல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றவேளை திடீர் மின் தடை ஏற்பட்டது.

தொடர்ந்து மண்டபத்தின் வெளி பகுதியில் மின் இணைப்பு பொருத்தப்பட்ட இடத்தில் தீ பற்றி எரிந்துள்ளது.

இது குறித்து உரிய தரப்பினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அங்கிருந்த உத்தியோகத்தர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டதுடன் அவசர தீயணைப்பு கருவியின் உதவியுடன் தீ பரவல் கட்டுப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

மின்சார சபை ஊழியர்கள் வருகை தந்து மின் ஒழுக்கின் காரணமாக தீ பற்றி எரிந்து சிதைவடைந்த மின் வயர்களை அகற்றி மின் இணைப்பினை சீர் செய்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் அற்றோராக 263,274 இளைஞர்கள்!

## சனத்தொகை மதிப்பீட்டு திணைக்களம்

**கொழும்பு, ஒக். 09**

**நாட்டில் 15 முதல் 29 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களில் 2 இலட்சத்து 63 ஆயிரத்து 274 பேர் தொழில் அற்றவர்களாக காணப்படுவதாக சனத்தொகை மதிப்பீட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிவர ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள- 18 முதல் 24 வயதுக்கு இடைப்பட்ட ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 606 பேர் தொழில் அற்றவர்களாக காணப்படுகின்றனர். 25 முதல் 29 வயதுக்கு இடைப்பட்டவர்களில் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 668 பேர் இந்த நிலையில் உள்ளார்கள்.

நாட்டில் வேலையற்றவர்களுள் ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 406 பேர் க.பொ.த. உயர்தரம் அல்லது அதனை விட அதிக தகைமைகள் உடையவர்கள்.

க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்த ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 234 பேர் உள்ளடங்கும் நிலையில் சித்தியடையாதவர்கள் 86,822 பேர் தொழில் இல்லாமல் உள்ளனர்.

மேலும், வேலையின்மை பெண்களிடையே அதிகமாக காணப்படுகிறது. பெண் தொழிலாளர் பங்கேற்புகள் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்துள்ளன.

எனவே, இளைஞர்கள் மத்தியில் பிரதான சிக்கலாக மாறியுள்ள தொழிலின்மையை குறைப்பதற்காக அரசாங்கம் செயற்படவேண்டும்.

அத்தோடு, அதிக கல்வியறிவு உள்ளவர்களிடையே காணப்படும் தொழிலின்மையை குறைக்கும் நோக்கில் புதிய அரசாங்கம் மூலம் அவசியமான கொள்கைகளை முன்வைக்க வேண்டும்.

அவ்வாறு இல்லையெனில், இளைஞர்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு வழங்கப்படும் பங்களிப்பு கிடைக்காத அதேவேளை, நாட்டில் உள்ள அறிவுள்ள திறமையான இளைஞர்களை சமூகத்திற்கு பிரயோசனமானவர்களாக உருவாக்க வாய்ப்புகள் கிடைக்காது. இதனால், சமுதாயத்திற்கான இழப்பு அளப்பரியது-என்றார்.

(அ)

# முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கவேண்டும்!

## நுகர்வோர் விவகார அதிகார சபை

கொழும்பு, ஒக். 08

சந்தையில் அதிகரித்து வரும் முட்டை விலையை கட்டுப்படுத்த அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை விதிக்கவேண்டும். இல்லாவிட்டால் முட்டையின் விலை கட்டுப்பாடின்றி மீண்டும் உயரக்கூடும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் 28 முதல் 32 ரூபாய் வரையில் இருந்த முட்டையின் விலை மீண்டும் 40 ரூபாயை தாண்டியுள்ளது.

இதேவேளை, நாட்டில் அதிகளவு முட்டை உற்பத்தி நடைபெறும் சூழலில் இடைத்தரகர்கள் முட்டைகளை சேமிப்பில் வைத்திருப்பதால் இந்த நிலை மோசமாக உள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

# முல்லைத்தீவு சிலாவத்தையில் பலசரக்கு கடை ஒன்று தீக்கிரை!

முல்லைத்தீவு, ஒக். 09

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் கடை ஒன்று எரிந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சிலாவத்தை சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள பலசரக்கு கடை ஒன்றும், அதனுடன் இருந்த களஞ்சியசாலை ஒன்றும் தீயில் எரிந்துள்ளது. குறித்த வீதி வழியாக சென்ற அரச பஸ் சாரதி, நடத்துநர் இதனை அவதானித்து அயல் வீட்டினரின் உதவியுடன் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இருப்பினும் பல இலட்சமான பொருட்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# குடும்பத் தகராறில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 09

நொச்சியாகம, வல்பலகமவில் வீடொன்றில் குடும்ப தகராறு காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த வீட்டில் குடும்பத் தகராறு இருப்பதாக 119 அவசர அழைப்பு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அந்த முகவரிக்கு சென்று சோதனை செய்தனர்.

இதன்போது, வீட்டில் மயங்கி கிடந்த ஒருவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது, வைத்தியர்கள் அவரை பரிசோதித்தபோது, குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வல்பலகம, நொச்சியாகம பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இவர் குடிபோதையில் மனைவியுடன் அடிக்கடி தகராறு செய்வது, அயலவர்களை தகாத வார்த்தைகளில் திட்டி வந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த நபரின் வாயை துணியால் கட்ட மனைவி முற்பட்டபோது குறித்த நபர் மயக்கமடைந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

சடலம் நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரின் மனைவி கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# டொலர் கையிருப்பை அதிகரிக்கும் வல்லமை எமது அணியிடம் உள்ளது!

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, ஒக். 09

எதிர்வரும் 2028ஆம் ஆண்டிலிருந்து நாட்டின் கடனை செலுத்துவதற்கும், நாட்டின் டொலர் கையிருப்பை அதிகரிக்கக்கூடிய வல்லமை தமது அணியிடம் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கெஸ்பெவ பகுதியில் தமது கட்சியின் ஆதரவாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத் தேர்தலினூடாக எமக்கு அதிகாரத்தை வழங்குவது மிகவும் பொருத்தமானதாகும். நாட்டை முன்



னோக்கிக்கொண்டு செல்லும் நிபுணத்துவம் வாய்ந்த தரப்பினர் எமது அணியில் உள்ளனர்.

2028ஆம் ஆண்டிலிருந்து கடன் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு நீண்ட கால எல்லையில்லை. குறிப்பாக இன்னும் 4 ஆண்டுகள் மாத்திரமே உள்ளன.

சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள இந்த சிறிய இடைவெளியில், போதுமானளவு அந்நிய செலாவணி கையிருப்பு எம்மிடம் இருக்கவேண்டும்.

அதற்குச் சிறந்த பொருளாதார கொள்கையிருக்க வேண்டும்.

எனவே ஐக்கிய மக்கள் சக்தியே அதனைச் சிறந்த வகையில் நிர்வகிக்கும்.

நாட்டு மக்கள் எதிர்நோககும் அழுத்தங்களை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லாமல், சர்ச்சைகள் இன்றி பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பயணத்தில் நாட்டை வழிநடத்த வேண்டும்-என்றார்.

(அ)

# இலங்கை-ரஷ்யா இடையே சுங்க ஒத்துழைப்பு ஒப்பந்தம்

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 09

இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கும் இடையிலான சுங்க நடவடிக்கைகள் தொடர்பான ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நிர்வாக உதவிகளைப் பெற்றுக்கொள்கின்ற ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சரவைப் பேச்சாளர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை அரசுக்கும் ரஷ்ய அரசுக்கும் இடையில் இடம்பெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தைத் தொடரின் பின்னர் வெளிப்படையானதும் ஊகிக்கக்கூடிய சுங்க நடவடிக்கையின் மூலம் சட்ட ரீதியான வர்த்தக நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்குவதற்காக இருதரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு 2021.11.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும், குறித்த ஒப்பந்தத்தில் இதுவரை கையொப்பமிடப்படவில்லை. இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் வர்த்தகத் தொடர்புகள் மூலம் உரித்தாகின்ற நன்மைகள் மற்றும் இருதரப்பு சுங்க ஒத்துழைப்புக்களில் மேலெழுந்து வரும் போக்குகளைக் கருத்தில் கொண்டு, குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராக ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளருக்கு சேவை நீடிப்பு

கொழும்பு, ஒக். 09

சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் சேவையை நீடிக்க, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகம் பதவிக்கு எயாவைஸ் மார்ஷல் ஆர்.எஸ்.பியன்விலவை நியமிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சரவைப் பேச்சாளர் இதனைக் குறிப்பிட்டார்.

குறித்த நியமன காலப்பகுதி 2024-09-13 திகதியில் முடிவடைந்துள்ளது. எனவே, மேற்குறித்த நபரை 2024-12-31ஆம் திகதி வரை சிவில் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகம் பதவியில் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக, பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச உறவுகளில் சமநிலை பேணப்படும்

## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 09

**இராஜதந்திர உறவுகளில் அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் சமமான முறையில் செயற்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் எந்த நாட்டையும் சிறப்பானதாகக் கருதவில்லை. நாடு சிறியதோ பெரியதோ, அனைத்து நாடுகளுடனும் இலங்கை இராஜதந்திர உறவுகளைப் பேணுகிறது.

எங்களுக்குள் எந்த வேறுபாடும் இல்லை. சீனா, இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, கியூபா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ளோம்.

இந்தியாவை போலவே சீனாவையும் கையாளுகின்றோம். சீனா ஊடாக விகாரைகளுக்கு சோலர் பனல்களை வழங்கும் திட்டம் உள்ளது. அத்துடன் இன்னும் சில தினங்களில் சீன இராணுவப் பயிற்சிக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவுள்ளது.

அதற்கான அனுமதியை



வழங்கியுள்ளோம். இதனால் இலங்கையின் பாதுகாப்புக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

முன்னதாக, அமெரிக்க, இந்திய மற்றும் ஜேர்மன் போர்க் கப்பல்கள் வந்துள்ளன. இது போன்ற இராஜதந்திர உறவுகளில், அனைத்து நாடுகளுடனும் சமமாக நடந்து கொள்கிறோம்-என்றார். (அ)

## கலால் ஆணையாளர் பதவியில் மாற்றம்!

கொழும்பு, ஒக். 09

கலால் ஆணையர் நாயகம் எம். ஜே.குணசிறியின் சேவையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் நிதியமைச்சராக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதேவேளை, குணசிறி ஒப்பந்த அடிப்படையில் கலால் ஆணையாளர் நாயகமாக பணியாற்றி வந்தார்.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக கடமையாற்றும் யு.டி.என்.ஜெயவீரவை அந்தப் பதவியில் பணியாற்றுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நிதி மோசடியில் ஈடுபட்ட 19 சீன பிரஜைகள் கைது!

கொழும்பு, ஒக். 09

இணையம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்ட மேலும் 19 சீன பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நாவல பகுதியில் வைத்து குறித்த 19 பேரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

நிதி மோசடி தொடர்பில் அண்மையில் கைதான 40 வெளிநாட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய குறித்த சீன பிரஜைகள் கைதாகினர்.

இதன்படி, இணையம் மூலம் நிதி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 59ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் 49 சீனப் பிரஜைகளும், நான்கு இந்தியப் பிரஜைகளும், 6 தாய்லாந்து பிரஜைகளும் அடங்குகின்றனர். கைதானவர்களிடம் இருந்த 499 கையடக்க தொலைபேசிகளும், 24 மடிக்கணினிகளும் கைப்பற்றப்பட்டன. (அ)

## ஆட்பதிவு ஆணையாளர் நாயகமாக எம்.எஸ்.பீ. சூரியப்பெரும நியமனம்!

கொழும்பு, ஒக். 09

ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பதவிக்கு பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றும் எம்.எஸ். பீ. சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைவாகவே அமைச்சரவை குறித்த அங்கீகாரத்தை வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (அ)

## கோழித் தீவன விலை குறைந்தால் முட்டை விலை குறையும் சாத்தியம்!

கொழும்பு, ஒக். 09

கோழித் தீவனத்தின் விலை குறைக்கப்படுமானால், முட்டைகளைக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய முடியும் என அகில இலங்கை கால்நடை பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார். கடந்த வாரத்தில் சுற்றுலாப்பயணிகளின் வருகை வீழ்ச்சி மற்றும் சந்தையில் முட்டைக்கான கேள்வி குறைந்தமையினால், முட்டை விலை குறைவடைந்தது.

ஏற்கனவே மேலதிக உற்பத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதால் அதிகளவான முட்டைகள் பண்ணைகளில் தேங்கியிருந்தன.

இதனை விவசாய அமைச்சின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு சென்றதுடன், கோழி முட்டை ஒன்றுக்கான விலையும் குறைக்கப்பட்டிருந்தது.

தற்போது, கோழி முட்டை ஒன்றுக்கான உற்பத்திச் செலவு 32 ரூபாயாகக் காணப்படுகின்றது.

கடந்த வாரம் பண்ணையாளர்கள் உற்பத்தி செலவினத்திற்குக் கீழ் மட்டத்திலேயே முட்டைகளைச் சந்தைக்கு விநியோகித்திருந்தனர்.

எனவே, கோழித் தீவனத்தின் விலை குறைக்கப்படுமானால், உற்பத்தி செலவினம் குறைவடையும்.

இதன்மூலம் குறைந்த விலையில் முட்டைகளைச் சந்தைக்கு விநியோகிக்க முடியும் என அகில இலங்கை கால்நடை பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிட்டார். (அ)

## இந்த வருடத்தில் இதுவரை 277 யானைகள் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 09

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 277 யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீனராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் 488 யானைகள் உயிரிழந்துள்ளன.

அதிகளவான யானைகள் பயிர்களை பாதுகாப்பதற்காக காணிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்சாரக் கம்பிகளில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, காணிகளில் சட்டவிரோதமாக பொருத்தப்பட்டுள்ள மின்சார கம்பிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீனராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# வடக்கில் காத்திருப்பு காலமின்றி கண்புரை சத்திர சிகிச்சைகள்!

## வைத்திய நிபுணர் எம்.மலரவன்

யாழ்ப்பாணம், ஒக். 09

வடமாகாணத்தில் காத்திருப்பு பட்டியல் இன்றி கண்புரை சத்திர சிகிச்சைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும், 10 நாட்களுக்கு 2ஆயிரம் கண்புரை சத்திர சிகிச்சைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் எம்.மலரவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச பார்வை தினத்தினை முன்னிட்டு, யாழ் போதனா வைத்தியசாலை கண்ணியல் பிரிவில் 2ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை செய்யவுள்ளோம்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் குறுகிய காலத்தில் கண்புரை சத்திர சிகிச்சை முகாமை நடத்துவது இது மூன்றாவது தடவை. வடமாகாணத்தில் இது நான்காவது தடவையாகும்.

இலங்கையில் மாத்திரம் இன்றி, சார்க் வலய நாடுகளில் கூட "பேகோ" மூலம் இப்படியான சத்திர சிகிச்சை முகாம்கள் நடத்தத்தில்லை. வடக்கிலையே இவ்வாறான கண் புரை சத்திர சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

முதல் தடவை நாங்கள் 1200 சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டோம். அதுபோன்று கடந்த வருடம் இரத்தினபுரி வைத்தியசாலை நட்புறவு மன்றத்தின் ஏற்பாட்டில் "சர்வதேச பார்வைகள் தினம் - 2023" முன்னிட்டு ஐந்து நாட்களில் 1200 பேருக்கு சத்திர சிகிச்சை செய்தோம்.

இந்த முறை யாழ்.போதனா வைத்தியசாலை கண்ணியல் பிரிவு, வடமாகாணத்தில் உள்ள ஏனைய கண்ணியல் பிரிவுடன் இணைந்து 2ஆயிரம் கண்புரை சத்திர சிகிச்சையை ஐந்து, ஐந்து நாட்களாக 10 நாட்களுக்குள் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கடந்த வருடம் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு சத்திர சிகிச்சை செய்துள்ளோம். இது வளர்ந்த நாடுகளுக்கு ஒப்பானது.

இந்த வருடம் இதுவரையிலான காலப் பகுதியில் யாழ் . போதனா வைத்தியசாலையில் மாத்திரம் 09 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்புரை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளோம். கிளிநொச்சி, வவுனியாவில் 05 ஆயிரம் பேருக்கு செய்துள்ளோம்

வடமாகாணத்தில் இந்த வருடம் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொள்ள திட்டமிட்டு இருந்தோம். ஆனால் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு செய்ய முடியும் என நம்புகிறோம்.

இதன் நிறைவு விழா எதிர்வரும் 25ஆம் திகதி வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நடத்தவுள்ளோம். அன்றைய தினம் ஆளுநரால் இரண்டு பிரகடனங்கள் வெளியிடப்படவுள்ளன.

வடமாகாணத்தில் கண்புரை சத்திர சிகிச்சைக்கான காத்திருப்பு காலம் பூச்சியமாக பேணுவது. அதாவது சத்திர சிகிச்சைக்காக பதிந்தால் ஒரு வார கால பகுதிக்குள் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளல் ஆகும். அதொரு சிறப்பான விடயமாக அமையும்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் காத்திருப்பு 2 வருடங்களுக்கு மேலாக இருந்தது. சத்திர சிகிச்சைக்கு பதிந்தால் 2 வருடங்களின் பின்னரே சத்திர சிகிச்சை மேற்



கொள்ள முடியும். சிலவேளைகளில் 4 வருடங்களுக்கு பின்னர் கூட சிலருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

லண்டன் உள்ளிட்ட நாடுகளில் கூட காத்திருப்பு காலம் இன்றும் உள்ளது. காசு கட்டி செய்வதாக இருந்தாலும் கூட இந்த காத்திருப்பு காலம் உண்டு

இந்த நிலையில் தான் வடமாகாணத்தில் காத்திருப்பு காலம் இல்லாது பதிந்தால் உடனடியாக சத்திர சிகிச்சையை மேற்கொள்ள கூடியவாறு இருக்கும்.

அதேவேளை இரண்டாவது பிரகடனமாக அனைத்து ஆரம்ப சுகாதார பிரிவுகளிலும், வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய சுகாதார திணைக்களத்தால் காத்திருப்பு காலம் இல்லாது உடனுக்கு உடன் கண்புரை சத்திர சிகிச்சையை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவுள்ளோம்.

எனவே வடமாகாணத்தில் வசிக்கும் அனைத்து மக்கள் ஆகிய உங்களுக்கு கண்புரை இருக்கிறது அல்லது பார்வை குறைப்பாடுகள் இருப்பதாக உணர்ந்தால் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்திற்கோ அல்லது தள வைத்தியசாலைக்கோ அல்லது மாவட்ட வைத்திய சாலைக்கோ சென்று கண்களை பரிசோதித்து, கண்புரை சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் எனில் காத்திருப்பு காலம் இன்றி செய்ய கூடியவாறாக இருக்கும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சி தோல்வி

## தமிழ் அரசு தனிவழி; சங்கு ஓரணியில்

காரைதீவு, ஒக். 09

**அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் தொடர் முயற்சி தோல்வியில் முடிந்தது. இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனிவழி செல்லும் தீர்மானத்தால் சிவில் அமைப்பால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுக்கட்டமைப்பாக செயல்பட்ட அமைப்புகளில் ஒன்றான சிவில் அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் இந்த முயற்சியை தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தது.

இதில் தமிழ் அரசுக்கட்சி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ்., ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடன் தொடர்ச்சியாக பேசி வந்தனர்.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சேர்ந்து பயணிக்க முடியாது. தமது கட்சி சின்னத்தை விட்டுக் கொடுக்க முடியாது என ஆரம்பத்திலேயே தெரிவித்து விலகியிருந்தனர்.

தொடர்ச்சியாக ஏனைய ஆறு கட்சிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தன.

கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை பொதுக் கட்டமைப்பின் மத்திய குழு உறுப்பினரும் குடிசார் அமைப்பு, தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகியவற்றின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான இ. விக்னேஸ்வரன், அம்பாறை மாவட்ட சிவில் அமைப்பு தலைவருமான கண. வரதராஜன் ஆகியோர் முன்னெடுத்து வந்தனர்.

இந்த தொடர் முயற்சியின் இறுதிக்கட்ட சந்திப்பு நேற்று முன்தினம் மாலை காரைதீவு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் பங்குபற்றிய ஆறு கட்சிகளும் தமது நிலைப்பாட்டை இறுதியாக தெரிவித்தனர்.

இது தொடர்பில் இணைப்பாளர் இ. விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கூறுகையில்,

"அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகள் பிரிந்து போட்டியிடுவதால் தமிழ் ஆசனம் இழக்கப்படும் அபாயத்தை கருத்தில் கொண்டு மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப முதற்கட்டமாக தமிழ்த் தேசிய கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தோம். ஆனால் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை"- என்றார்.

இதேவேளை, "அம்பாறையில் தமிழ் அரசுக்கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவது என்று முடிவு செய்துள்ளது. எமது சின்னத்தின் கீழ் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளை இணைத்து போட்டியிட தயார். ஆனால், எமது கட்சி சின்னத்தை விட்டுக்கொடுக்க முடியாது. சங்கு சின்னம் ஆரம்பத்தில் பொதுக் கட்டமைப்பின் கீழ் பொதுவாக இருந்தாலும், அது தற்போது குறிப்பிட்ட கட்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் சங்கு சின்னத்தில் போட்டியிட முடியாது என தெரிவித்து வீட்டுச் சின்னத்தில் தனித்து போட்டியிட தீர்மானித்துள்ளோம்" என்று தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதிநிதிகளான க. ஜெயசிறில், அ. நிதான்சன் ஆகியோர் கூறினர்.

ஏனைய ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகளான ரெலோவின் ஹென்றி மகேந்திரன், ஈரோஸின் இராஜேந்திரா, புளொட் சங்கரி, ஈ. பி. ஆர். எல். எவ். புண்ணியநாதன், ஜனநாயக போராளிகள் கட்சி சுமி ஆகியோர் கூறுகையில்,

"நாங்கள் முடிந்தவரை விட்டுக்கொடுப்பை செய்துள்ளோம். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழக்கக் கூடாது என்பதற்காக விட்டுக் கொடுப்புடன் பொறுமையாக செயல்பட்டுள்ளோம். திருகோணமலையில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட இணங்கினோம். அம்பாறையில் சங்கு சின்னத்தில் போட்டியிட நாங்கள் (ஐந்து கட்சிகள்) தயார் என்று தமிழ் அரசுக்கட்சியை அழைத்திருந்தோம். இன்று வரை நல்ல முடிவுக்காக காத்திருந்தோம். தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில்தான் அம்பாறையில் போட்டியிட வேண்டும் என்று எங்களை அழைத்தார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

நாங்கள் விட்டுக்கொடுப்புடன் செயல்பட்டும் அவர்கள் விட்டுக்கொடுப்புடன் செயல்பட வில்லை. நாங்கள் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்துள்ளோம். ஆகவே, இனி நாங்கள் எங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்போம். சங்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளோம்"- என்றனர். (எ)

# தென்னையில் கட்டிவைத்து நடத்துநர்மீது சித்திரவதை!

களுவாஞ்சிக்குடி, ஒக். 09

தனியார் பேருந்து ஒன்றில் பணத்தை திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட நடத்துநரை பேருந்து உரிமையாளர் தென்னை மரத்தில் கட்டிவைத்து அடித்து சித்திரவதை செய்த சம்பவம் திங்கட்கிழமை களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஒந்தாச்சிமடம் பகுதியில் இடம்பெற்றது.

களுவாஞ்சிக்குடி மகிளூர் பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளரின் கல்முனை - மட்டக்களப்பு போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் பேருந்தில் நடத்துநராக அம்பாறை மத்திய முகாம் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது இளைஞன் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில், அந்த பேருந்தில் இருந்து பணத்தை திருடியதாக நடத்துநர் மீது தனியார் பேருந்து உரிமையாளர் குற்றஞ்சாட்டி கடமையிலிருந்த இளைஞனை நேற்று முன்தினம் பகல் ஒந்தாச்சிமடம் பிரதான வீதியிலுள்ள பாழடைந்த காணியொன்றுக்குள் இழுத்துச் சென்று அங்கிருந்த தென்னை மரத்தில் கட்டிவைத்து கட்டையால் தாக்கி சித்திரவதை செய்துள்ளார்.

இதனைக் கண்ட பொதுமக்கள் கடும் கவலை தெரிவித்து, பொலிஸாருக்கு அறிவித்த நிலையில் சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

அதன் பின்னர், மரத்தில் கட்டிவைத்து அடித்தவரை அங்கிருந்து பொலிஸார் அப்புறப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)



# பனங்காடு பிரதேச மருத்துவமனை அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

கல்முனை, ஒக். 09

பனங்காடு பிரதேச மருத்துவமனை அபிவிருத்தி குழுவினரை சந்தித்து அந்த மருத்துவமனையின் அபிவிருத்தி தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் கலந்துரையாடினார்.

இதன்போது, குறித்த மருத்துவமனையின் தேவைகள் மற்றும் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்ட பணிப்பாளர், சுகாதார மேம்பாடு மற்றும் மருத்துவமனையின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரி, மருத்துவர் எம். சீ. எம். மாஹிரும் கலந்துகொண்டார். (எ)

# காட்டு யானைகளை விரட்டும் சிறுவர்கள்

## வேடிக்கை பார்க்கும் அதிகாரிகள்



கல்முனை, ஒக். 09

காட்டு யானைகளை நெருப்பினால் சிறுவர்கள் விரட்டும் நிகழ்வு அம்பாறை, கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட புறநகர் பகுதிகளில் தற்போது வழமையாகி விட்டது.

இந்தப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் குடியிருப்பை அண்மித்த கல்முனை சாய்ந்தமருது மற்றும் நற்பிட்டிமுனை பிரதேச கரைவாகு வயல் பகுதிகளில் கடந்த சில நாட்களாக காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதுடன் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் வேடிக்கை பார்க்கும் நிலையில் யானைகளை விரட்டும் முயற்சியில் சிறுவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மேற்குறித்த பிரதேச வயல் வெளி பகுதியில் தொடர்ச்சியாக கடந்த சில நாட்களாக காட்டு யானைகள் 08 முதல் 10 வரை வருகை தந்த வண்ணமுள்ளன. இவ்வாறு வருகை தரும் காட்டு யானைகள் அருகில் உள்ள மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைவதுடன் அந்த யானைகளை சிறுவர்கள் விரட்டும் நடவடிக்கையில் கடந்த சில தினங்களில் ஈடுபட்டதை காண முடிந்தது. கல்முனை மாநகர எல்லை பிரிவில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கல்முனை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கீறீன் பில்ட் தொடர்மாடி குடியிருப்பு பகுதி மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பொலிவேறியன் குடியிருப்பு வீட்டுத் திட்ட பகுதியை அண்மித்த வயல் வெளியில் காட்டு யானைகளின் வருகை காணப்படுகின்றன. (எ)



மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல ஆச்சிர மத்தில் சிறீ மத்சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலை யில் நவராத்திரி விழா கொலு வைத்து நடைபெற்று வருகிறது.

# "தமிழ்த் தேசியத்தை சிதைக்கின்றனர்"

பொத்துவில், ஒக். 09

"சமகாலத்தில் தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுபவர்களே தமிழ்த் தேசியத்தை சிதைப்பவர்களாக உள்ளனர். அம்பாறை தமிழ் மக்களைப் பற்றி சற்றும் சிந்திக்காத இவர்களின் செயல்பாடுகள் கவலைக்குரியவை" என்று பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் பெ. பார்த்திபன் தெரிவித்தார்.

"இன்று தமிழ்த் தேசியம் அதல பாதாளத்துக்குள் போய்க் கொண்டிருக்கிறது . தலைமைகள் தமக்குள் வேறுபடுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்படுகின்ற ஆபத்து இருக்கின்றது.

மக்களுக்காக கட்சியே தவிர கட்சிக்காக மக்கள் அல்ல.

எனவே, பழையவர்களை தவிர்த்து புது இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும். இன்றேல் மக்கள் பெரும்பான்மை கட்சிகளுடன் சேர்ந்து போக நேரிடும்.

கடந்த முறை செய்த தவறை இம்முறையும் செய்யக்கூடாது.

மக்கள் மனநிலை வேறு அரசியல்வாதிகளின் மனநிலை வேறாக இருக்கின்றது.

எல்லோரும் சேர்ந்து தான் இதற்கு முடிவு கட்ட வேண்டும்.

சிலர் தேசிய பட்டியலுக்காக அம்பாறையை மைதானமாக பயன்படுத்துகின்றனர்.

எமக்கு உள்ளது ஒரேயொரு பிரதிநிதித்துவம். அதற்கு 100 பேர் போட்டியிடுகின்றனர். தேசியம் பேசும் இவர்களால் தமிழ்த் தேசியம் பாதுகாக்கப்படாது. எனவே, இந்த இறுதிச் சந்தர்ப்பத்திலாவது ஒன்றுபடுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “பீனிக்ஸ் பறவை போல ஹமாஸ் உயிர்த்தெழும்”

காஸா, ஒக்.09

**ஹமாஸ் அமைப்பு பீனிக்ஸ் பறவை போல சாம்பலில் இருந்து மீண்டும் உயிர்த்தெழும் என்று நாடு கடந்து வாழும் அதன் தலைவர்களில் ஒருவரான காலிட்மெசெல் ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளார்.**



இஸ்ரேலுடனான கடந்த ஓராண்டுகால யுத்தத்தின் போது பெரும் இழப்புகளை ஹமாஸ் சந்தித்துள்ள போதிலும் அந்த அமைப்பு புதிய போராளிகளை சேர்த்தும் ஆயுதங்களை உற்பத்தி செய்தும் வருகிறது.

இஸ்ரேலுடனான கடந்த ஒரு வருட மோதலை 76 வருட கால வரலாற்றுடன் பலஸ்தீனியர்கள் நக்பா என அழைப்பதுடன் தொடர்புபடுத்தி ஹமாஸின் நாடு கடந்து வாழும் தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

1948 இல் இஸ்ரேலின் உருவாக்கத்துக்கு காரணமான யுத்தத்தால் பலஸ்தீனியர்கள் பெருமளவில் இடம்பெயர நேர்ந்ததை நக்பா என பலஸ்தீனியர்கள் அழைக்கின்றனர்.

பலஸ்தீன வரலாறு பல சுற்றுக்களை கொண்டது என அவர் கூறினார்.

நாங்கள் தியாகிகளை இழந்த எங்கள் இராணுவத் திறமையின் ஒரு பகுதியை இழந்த தருணங்களை எதிர்கொண்டுள்ளோம். ஆனால், பின்னர் பீனிக்ஸ் போல பலஸ்தீனியர்களின் உணர்வுகள் மீள உயிர்த்தெழும்.

1996 முதல் 2017 வரை ஹமாஸ் அமைப்பின் தலைவராக விளங்கிய மெசாலை விச ஊசியை பயன்படுத்தி கொலை செய்வதற்கு 1997 இல் இஸ்ரேல் முயன்றது.

நெதன்யாகு அரசாங்கம் அதிகாரத்தில் இருக்கும் வரை சமாதானத்துக்கான வாய்ப்புகள் இல்லை. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு காணப்படும் வரை மத்திய கிழக்கு எந்த நேரத்திலும் வெடிக்கக்கூடிய குண்டு போல காணப்படும்”- என்று எச்சரித்தார். (எ)

# மருத்துவத்துக்கான நோபல் பரிசு இருவருக்கு அறிவிப்பு


ஸ்டாக்ஹோம், ஒக். 09


2024ஆம் ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு விக்டர் ஆம்ரோஸ், ஹரி ருவ்குன் ஆகிய இருவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோ ஆர். என். ஏவை கண்டுபிடித்ததற்காக இருவருக்கும் நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோ ஆர். என். ஏவின் கண்டுபிடிப்பு மற்றும் அதற்குப் பிந்தைய படியெடுத்தல் மரபணு ஒழுங்குமுறையில் அதன் பங்கு குறித்த ஆராய்ச்சிக்காகவும், விக்டர் ஆம்ரோஸ் மற்றும் ஹரி ருவ்குன் ஆகியோருக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

அவர்களின் கண்டுபிடிப்பு “உயிரினங்கள் எவ்வாறு உருவாகின்றன மற்றும் செயல்படுகின்றன என்பதற்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நிரூபிக்கிறது” என்று நோபல் சபை தெரிவித்துள்ளது.



# ஓராண்டு நினைவேந்தல்

டெல் அவில், ஒக். 09

ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி நடத்திய எதிர்பாராத தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவைக் கடைப்பிடிக்க ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடி உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தினர். இஸ்ரேல் தலைநகர் டெல் அவில் நகரில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. (எ)

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு இரு சீனர்கள் பலி

கராச்சி, ஒக். 09

பாகிஸ்தானின் சிந்து மாகாண தலைநகரான கராச்சியில் மர்மப் பொருள் ஒன்று பயங்கர சத்தத்துடன் வெடித்தது. ஜின்னா சர்வதேச விமான நிலையம் அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றது.

இதில் சீனப் பிரஜைகள் இருவர் உயிரிழந்தனர். அத்தோடு, பத்துப் பேர் படுகாயமடைந்தனர்.

சம்பவ இடத்தில் இருந்து கரும்புகை வெளியேறும் காட்சிகள் ஊடகங்களில் வெளியாகின.

கராச்சி விமான நிலையத்தை சுற்றியுள்ள இடங்கள் பாதுகாப்பு வளையத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் அனைத்து வாயில்களும் மூடப்பட்டுள்ளன.

வெடிப்பு சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் சில கார்களும் தீ பிடித்து எரிந்தன.

இது ஓர் “பயங்கரவாதத் தாக்குதல்” சிந்து மாகாணத்தில் மின் திட்டத்தில் பணிபுரியும் சீன பொறியாளர்களை குறிவைத்து இந்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தப்பட்டதாக பாகிஸ்தானிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (எ)

# ஹரியானாவில் ஹட்ரிக் வெற்றி

## 48 தொகுதிகளில் பா. ஜ. க. முன்னிலை

புதுடில்லி, ஒக். 09

ஹரியானாவில் மொத்தமுள்ள 90 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 48 தொகுதிகளில் பா. ஜ. க. முன்னிலை வகித்து வருகிறது. இதன் மூலம் அந்தக் கட்சி மூன்றாவது முறையாக ஆட்சியைப் படிக்கும் வாய்ப்பை பெற்றுள்ளது.

இந்தியத் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள நிலவரப்படி, பா. ஜ. க. 48 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் 36 தொகுதிகளிலும், இந்திய தேசிய லோக் தளம் மற்றும் பகுஜன் சமாஜ் ஆகியவை தலா ஒரு தொகுதியிலும், சுயேச்சைகள் 4 தொகுதிகளிலும் முன்னிலை வகிக்கின்றன.

46 தொகுதிகளில் வெற்றி பெறக்கூடிய கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடியும். அந்த வகையில், தற்போதைய நிலவரப்படி அதற்கான வாய்ப்பை பா. ஜ. க. பெற்றுள்ளது. பா. ஜ. க. மீண்டும் ஆட்சி அமைக்குமானால் அந்தக் கட்சிக்கு ஹட்ரிக் வெற்றியாக அமையும். (எ)

# காஷ்மீர் தேர்தல் முடிவு காங்கிரஸ் முன்னிலை

சிறீநகர், ஒக். 09

ஜம்மு காஷ்மீர் சட்டப் பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்றுக் காலை 8 மணிக்கு தொடங்கியது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது. இதன்படி காங்கிரஸ் கூட்டணி - 48, பா. ஜ. க. - 29, பி. டி. பி. - 4, பிற கட்சிகள் 9 இடங்களில் முன்னிலை வகிக்கின்றன.

முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படுகின்றன. ஆரம்ப நிலையில் காங்கிரஸ் - தேசிய மாநாடு கட்சி கூட்டணி, பா. ஜ. க. இடையே கடும் போட்டி நிலவியது. இதேவேளை, தேசிய மாநாட்டுக் கட்சியின் முக்கிய தலைவர் ஒமர் அப்துல்லா அவர் போட்டியிட்ட இரண்டு இடங்களிலும் முன்னிலை வகிக்கிறார். (எ)

# “உக்ரைன், ஐ. நா. இல்லாமல் ரஷ்யாவுடன் பேச்சு இல்லை”

## கமலா ஹாரிஸ் திட்டவட்டம்

வாஷிங்டன், ஒக். 09

ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிரான உக்ரைனின் தற்காப்பு நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம். உக்ரைனை ஆதரிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். உக்ரைன், ஐ. நா. இல்லாமல் ரஷ்யாவுடன் பேச்சுகள் இல்லை என்று அமெரிக்காவின் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.

தொலைகாட்சி நேர்காணல் ஒன்றில் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் இவ்வாறு கூறினார். “ஐ. நா. மற்றும் உக்ரைன் இல்லாமல் போரை முடிவுக்கு கொண்டு வருவது சாத்தியமற்றது. ஒரு வேளை டொனால்ட் ட்ரம்ப் இப்போது ஜனாதிபதியாக இருந்திருந்தால் ரஷ்ய ஜனாதிபதி புடின், கீவ் நகரில் இருந்திருப்பார். இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து அமெரிக்கா ஒரு போதும் பின்வாங்காது. ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிரான உக்ரைனின் தற்காப்பு நடவடிக்கைகளை நாங்கள் ஆதரிக்கிறோம்”- என்றார். (எ)

# ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதி கொலை

பெய்ரூட், ஒக். 09

லெபனான் தலைநகர் பெய்ரூட்மீது இஸ்ரேல் இராணுவம் நேற்றுக்காலை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் மூத்த தளபதி சுஹைல் ஹூசைனி கொல்லப்பட்டார் என்று இஸ்ரேல்இராணுவம்தெரிவித்துள்ளது.

சுஹைல் ஹூசைனி, ஹிஸ்புல்லா அமைப்பின் தளவாடங்கள், வரவு செலவுத் திட்டம் மற்றும் நிர்வாகத்தை மேற்பார்வையிடும் பொறுப்பில் இருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஈரானில் இருந்து நவீன ஆயுதங்களை கொண்டு வந்து, அவற்றை வெவ்வேறு ஹிஸ்புல்லா பிரிவுகளுக்கு விநியோகிப்பதில் ஹூசைனி ஈடுபட்டதாகவும், அவர் ஹிஸ்புல்லா இராணுவ சபை உறுப்பினராக இருந்தவர் என்றும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# காஸாவில் மசூதிமீது இஸ்ரேல் தாக்குதல்

## 18 பேர் உயிரிழந்தனர்

காஸா, ஒக். 09

காஸாமீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது. மத்திய காஸாவின் டெய்ர் அல் - பலாஹ் நகரில் உள்ள மசூதியை குறிவைத்து குண்டுகளை வீசி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதில் 18 பேர் கொல்லப்பட்டதாகவும், 2 பேர் படுகாயமடைந்ததாகவும் பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெய்ர் அல்-பலாஹ் நகரில் உள்ள அல்-அக்ஸா தியாகிகள் மருத்துவமனைக்கு அருகில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த மசூதி தாக்கப்பட்டதாக மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய லீக்
# ஒருநாள் போட்டி சம்பியனானது கொழும்பு




தம்புள்ளை, ஒக். 09

சிறீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தால் நடத்தப்பட்டு வந்த ஐந்து அணிகளுக்கு இடையிலான தேசிய சுப்பர் லீக் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் சரித் அசலங்க தலைமையிலான கொழும்பு அணி சம்பியனானது.

ரங்கிரி, தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஜனித் லியனகே தலைமையிலான யாழ்ப்பாணம் அணியை 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டு கொழும்பு அணி சம்பியனானது.

சரித் அசலங்க குவித்த இரட்டைச் சதம், அவிஷ்க பெர்னாண்டோ குவித்த சதம் என்பன கொழும்பு அணியின் வெற்றியை இலகுவாக்கின.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 413 ஓட்டங்களைக் குவித்தது.

அவிஷ்க பெர்னாண்டோவும் சரித் அசலங்கவும் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 3ஆவது விக்கெட்டில் 262 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வெற்றி பெறச் செய்தனர்.

அவிஷ்க பெர்னாண்டோ 113 பந்துகளை எதிர்கொண்டு 10 பௌண்ட்ரிகள், 6 சிக்ஸர்களுடன் 126 ஓட்டங்ளைப் பெற்றார்.

சரித் அசலங்க 142 பந்துகளை எதிர்கொண்டு 12 பௌண்ட்ரிகள், 16 சிக்ஸர்களுடன் 206 ஓட்டங்களைக் குவித்தார்.

யாழ்ப்பாணம் அணியில் இடம்பெற்ற ஒரே ஒரு யாழ். வீரர் வியாஸ்காந்த் 10 ஓவர்களில் 59 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட் எதனையும் கைப்பற்றவில்லை.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் அணி 47. 1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 321 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

லஹிரு மதுஷங்க மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 86 பந்துகளில் 10 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 104 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் டிலும் சுதீர 53 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் சரித் அசலங்க 51 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் நுவன் துஷார 62 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் தசுன் ஷானக்க 67 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் சகலதுறைகளிலும் பிரகாசித்த சரித் அசலங்க ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

சம்பியனான கொழும்பு அணிக்கு வெற்றிக் கிணணத்துடன் 30 இலட்சம் ரூபாய் பணப்பரிசும் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் அணிக்கு 25 இலட்சம் ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இதனைவிட ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் ஆகிய இரண்டு விருதுகளையும் வென்ற சரித் அசலங்கவுக்கு மொத்தமாக 22 இலட்சத்து 50,000 ரூபாய் பணப்பரிசு வழங்கப்பட்டது.

(எ)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி இங்கிலாந்து மகளிர் வெற்றி

டுபாய், ஒக். 09

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகள் இடையிலான போட்டியில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 125 ஓட்டங்கள் எடுத்து இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது.

9ஆவது மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள டுபாய் மற்றும் சார்ஜாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழந்து 124 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து தரப்பில் சோபி எக்லெஸ்டோன் 2 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 125 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது. அந்த அணி வீராங்கனைகள் சிறப்பாக விளையாடினர். இறுதியில், இங்கிலாந்து அணி 19. 2 ஓவரில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 125 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

(எ)






## பாகிஸ்தான் 515 ஓட்டங்கள் குவிப்பு

முல்தான், ஒக். 09

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 515ஓட்டங்கள் குவித்தது. அணித் தலைவர் ஷான் மசூத் 151 ஓட்டங்களும், தொடக்க வீரரான அப்துல்லா ஷபிக் 102 ஓட்டங்களும் விளாசினர்.

முல்தான் நகரில் நேற்று முன்தினம் இந்தப் போட்டி ஆரம்பமானது.

முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் பாகிஸ்தான் அணி 86 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 328 ஓட்டங்கள் எடுத்தது. இந்த நிலையில் நேற்று 515 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்கள் இழந்திருந்தது.

(எ)

# 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து ஆறுதல் வெற்றி!



## தொடரை கைப்பற்றியது தென்னாபிரிக்கா

அபுதாபி, ஒக். 09

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி ஆறுதல் வெற்றி பெற்றது. இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 1 - 2 என்ற கணக்கில் நிறைவு செய்தது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி, 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 284 ஓட்டங்கள் எடுத்தது.

ஸ்டர்லிங் 88, ஹாரி டெக்டர் 60, பால்பிர்னி 45, கேம்பர் 34, லோர்கன் டக்கர் 26 ஓட்டங்கள் எடுத்தனர். ஒரு கட்டத்தில் 300 ஓட்டங்களை எட்டும் நிலையில் இருந்தது அயர்லாந்து. இருப்பினும் தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் வில்லியம்ஸ் 49ஆவது ஓவரில் மூன்று விக்கெட்களை கைப்பற்றிய காரணத்தால் அயர்லாந்தின் ஓட்டக் குவிப்பு கட்டுப்படுத்தப்பட்டது.

285 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை தென்னாபிரிக்கா விரட்டியது. 79 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து அந்த அணி தடுமாறியது. அப்போது, ஜேசன் ஸ்மித் 93 பந்துகளில் 91 ஓட்டங்களை எடுத்தார். அவரது ஆட்டம் அயர்லாந்து அணியின் வெற்றியை சற்றே தள்ளிப்போட்டது. இருப்பினும், 46.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 215 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது தென்னாபிரிக்கா. இதன் மூலம் 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி வெற்றி பெற்றது. முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா தொடரை கைப்பற்றியது.

(எ)

# இந்திய அணிக்கு திரும்பியதை மறுபிறப்புபோல உணர்கிறேன்

## வருண் சக்கரவர்த்தி நெகிழ்ச்சி


குவாலியர், ஒக். 09

இந்திய அணிக்குள் மீண்டும் உள்வாங்கப்பட்டதை மறுபிறப்பு போல உணர்கிறேன் என்று சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தி தெரிவித்தார்.

கடந்த 2021ஆம் ஆண்டு ரி - 20 உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் அணிக்குத் திரும்பினார் தமிழகத்தைச் சேர்ந்த வருண். குவாலியரில் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் 4 ஓவர்கள் வீசி 31 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 3 விக்கெட்களை வீழ்த்தினார். போட்டிக்குப் பிறகு வருண் கூறுகையில், “மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அணிக்குள் திரும்புவது உணர்வு பூர்வமானது. மீண்டும் இந்திய அணியின் ஜெர்ஸியை அணிவதில் மகிழ்ச்சி. இதை மறுபிறப்பு போல உணர்கி றேன். வழக்கமாக நான் கடைப் பிடிக்கும் அதே செயல் முறையை பின்பற்றுகிறேன்.

இந்திய அணியில் வாய்ப்பு பெற உயர்ந்த செயல்திறன் அவசியம். அதுதான் வாய்ப்புக்கான கதவை தட்டும் [illegible] வெளிப்படுத்துவேன்” - என்றார்.

(எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா...

வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சரவைப் பேச்சாளர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் சமகால கூட்டத்தொடரில் முன்மொழியப்பட்டுள்ள பிரேரணை வரைவை இலங்கை நிராகரிப்பதாகவும் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு இலங்கை தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து வருவதுடன், சாட்சிகளைத் திரட்டுகின்ற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கின்ற எந்தவொரு தீர்மானத்திற்கும் உடன்படாததுடன், குறித்த தீர்மானத்தை நிராகரித்திருப்பினும், உள்நாட்டுச் செயன்முறை மூலம் நல்லிணக்கம் உள்ளிட்ட முக்கிய மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசு உறுதிபூண்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் பேரவை மற்றும் நிரந்தர மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் ஒத்துழைப்புடனும், மற்றும் ஆக்கபூர்வமான உரையாடல் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் - என்றார். (அ)

## வேட்பாளர்கள்...

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அடாவடித்தனமாகப் பல்வேறு குழறுபடிகளைச் செய்து தனக்கு வேண்டியவர்களுக்கு நியமனத்தைக் கொடுத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் பாரியாரும் தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி உறுப்பினருமான சசிகலா ரவிராஜ், கட்சியிலிருந்து திங்கட்கிழமை விலகியதுடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளராக வேட்புமனுவில் கையெழுத்தும் இட்டார்.

தவராசா மற்றும் சசிகலா மாத்திரமன்றி கட்சியின் மேலும் சில சிரேஷ்ட உறுப்பினர்களும் இந்த வேட்பாளர் பட்டியல் தொடர்பில் கடும் அதிருப்தியடைந்திருந்த நிலையில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா திங்கட்கிழமை கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகினார்.

இந்நிலையில், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியலில், மக்கள் மத்தியில் செல்வாக்குடைய சிரேஷ்ட உறுப்பினர்களின் பெயர்கள் ஏன் உள்வாங்கப்படவில்லை என்றும், அதற்குரிய நியாயமான காரணங்கள் என்ன என்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கத்திடம் வினவியபோது அதற்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

"இந்தத் தீர்மானம் கட்சியின் தேர்தல் நியமனக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்து அதிக எண்ணிக்கையான விண்ணப்பங்கள் வரும்போது, அவற்றை ஆராய்ந்து அதில் பொருத்தமான விண்ணப்பங்களை மாத்திரம் தெரிவுசெய்யவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

எனவே, இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான செயன்முறையொன்று நியமனக் குழுவால் வகுக்கப்பட்டு, அதற்கு அமைவாகவே வேட்பாளர் தெரிவு இடம்பெற்றது.

எனவே, இவ்வாறானதொரு பின்னணியில் சிலர் ஏன் தெரிவு செய்யப்படவில்லை என்பதற்குத் தனித்தனியாகக் காரணம் கூறுவது சாத்தியமற்றதாகும்." - என்றார். (அ)

## ஐ. த. தே. கூட்...

போட்டியிடுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் கூட்டணியாக வீட்டுச் சின்னத்தில் களமிறங்குகிறது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தனித்துப் போட்டியிடும் மாவட்டங்களில் வேட்பாளர் பட்டியல் இறுதியடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் தலைவருமான த. சித்தார்த்தன், ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கம், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஜெ. நவீந்திரா (வேந்தன்), சசிகலா ரவிராஜ், ரெலோ பேச்சாளர் கு. சுரேந்திரன் பா. கஜதீபன், சிவகுமாரன், ஜயனந்தன் (ஜனா) ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

திருகோணமலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் களமிறங்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 7 வேட்பாளர்களில் 3 ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மூவர் பட்டியல் இறுதியானதும் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலரிடம் வழங்கப்படும் என்று தெரியவருகின்றது. (ஐ)

## யாழிலிருந்து...

தொடுவாய் தெற்கு, கொக்குதொடுவாயை சேர்ந்த ஆறுமுகம் ஜெயராசா என்பவரை வெள்ளை நிற கார் ஒன்றில் முறைப்படி கைது செய்யப்படாது அழைத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஆறுமுகம் ஜெயராசாவை காணவில்லையென அவரது உறவினர்கள் தேடியலைந்துள்ளனர்.

ஒருவாறாக நேற்று முன் தினம் திங்கட்கிழமை மல்லாகத்திலுள்ள விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் அவரை தடுத்துவைத்து வைத்துள்ளதை அறிந்து, குறித்த விடயத்தை யாழ்ப்பாணம் பிராந்திய மனித உரிமைகள் இணைப்பாளர் கனகராஜின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

நேற்று காலை குறித்த மல்லாகம் விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவிற்கு சென்ற யாழ்ப்பாண பிராந்திய மனித உரிமைகள் இணைப்பாளர் குறித்த அதிகாரிகளுடன் கைது செய்யப்பட்டவர் தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனினும் பல மணிநேரமாக பொலிஸார் மறுத்துள்ளனர். கைது செய்யப்பட்ட ஜெயராசாவின் உறவினர்கள் வழங்கிய ஆதாரங்களின் அடிப்படையில் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்ட மனித உரிமைகள் இணைப்பாளரிடம், பல மணி நேரத்தின் பின் தாம் ஒரு களவு தொடர்பான முறைப்பாட்டின் அடிப்படையில் அவரை கைது செய்துள்ளதாக ஒத்துக்கொண்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை பார்வையிட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், அவர் மீது பலத்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் சட்ட வைத்திய அதிகாரியின் முன் நிறுத்தி உடனடியாக மருத்துவ அறிக்கை மருத்துவ சிகிச்சை வழங்குமாறு பணித்துள்ளார்.

வெளிநாட்டில் வதியும் ஒருவருக்கும் கைது செய்யப்பட்ட நபருக்கும் இடையில் வணிக ரீதியான தொடர்புகள் இருந்ததாகவும் இதனால் அவர் செய்த முறைபாட்டின் அடிப்படையிலேயே குறித்த கைது இடம் பெற்றிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. குறித்த நபர் வதியும் பகுதியில் உள்ள முல்லைத்தீவு மாவட்ட பொலிஸிலேயே முறைப்பாடு செய்யப்பட்டு அவர்களுக்கு ஊடாகவே கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், இவ்விடயத்தில் பொலிஸார் பக்க சார்பாக நடந்து கொண்டுள்ளதாகவும் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். (அ-05)

# தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 09

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் இறுதியாகியுள்ளது.

க. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணிக்குள் அண்மையில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. வி. மணிவண்ணனுக்கு முன்னுரிமையளிப்பதாக தெரிவித்து, அந்த கட்சியின் மூத்தவர்கள் பலர் அதிருப்தியடைந்து, கட்சி செயற்பாட்டிலிருந்து ஒதுங்கி விட்டனர்.

இதை தொடர்ந்து, வி.மணிவண்ணன் தரப்பே வேட்பாளர்களை களமிறக்கியுள்ளது.

கட்சியின் வேட்பாளர் பட்டியலில், வி.மணிவண்ணன், வ.பார்த்தீபன், செல்டன் (யாழ் மத்திய கல்லூரி கிரிக்கெட் பயிற்சியாளர்), சிற்பரன், ஜெனிட்டன் (கோப்பாய்- விளையாட்டு உத்தியோகத்தர்), உமாகரன் இராசையா, மிதிலைச்செல்வி (முன்னாள் தமிழரசுக் கட்சி மகளிர் அணி உறுப்பினர்), கோகிலவாணி (கிளிநொச்சி), சாவகச்சேரியை சேர்ந்த தனியார் நிறுவனமொன்றின் பிராந்திய முகாமையாளர் ஆகியோர் போட்டியிடுகின்றனர். (அ)

# நிலுவைத் வரித் தொகையை செலுத்த தவறியவர்களின் சொத்துகள் பறிமுதல்

கொழும்பு, ஒக். 09

இந்த ஆண்டு இறுதிக்குள் செலுத்த வேண்டிய நிலுவைத் வரித் தொகையை வசூலிக்க அதிகபட்ச நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வரி செலுத்தத் தவறியவர்கள் இருந்தால், அவர்களது வங்கிக் கணக்குகளை முடக்கவும் சொத்துக்களை பறிமுதல் செய்யவும் அதிகாரம் உள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த, உள்நாட்டு இறைவரி திணைக்கள பிரதி ஆணையாளர் நாயகம் என். எம். என். எஸ். பி. திஸநாயக்க இதனை குறிப்பிட்டார்.

எனினும், வரி வசூலிக்க வரும் அதிகாரிகளின் அடையாளத்தை உறுதி செய்ய வேண்டும் என்றும், நிலுவைத் தொகையை காசோலையாகவோ, பணமாகவோ வழங்கவேண்டாம் என்றும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார். (அ)

## இலங்கை...

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியினையும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம், ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி முகவர் நிலையத்தின் ஊடாக நிதி உதவிகளை வழங்கத் தயாரெனவும் தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

ஊழல் மோசடிகளை மட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு அமெரிக்க தொழில்நுட்ப உதவிகளை வழங்குமெனவும் அவர் உறுதியளித்தார்.

சிறந்த அரச நிருவாகத்திற்காக வழங்கக்கூடிய எந்தவோர் உதவியையும் வழங்குவதோடு, பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்தில் அதற்கான உதவிகளை வழங்கவும் அவர் இணக்கம் தெரிவித்தார்.

மீள் புதுபிக்கத்தக்க வலுசக்தி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குதல் மற்றும் கிராமங்களின் வறுமையை ஒழிப்பதற்காக புதிய ஜனாதிபதியால் முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமெரிக்க தூதுவர் உறுதியளித்தார்.

தற்போது செயற்படுத்தப்படும் கிராமிய பாடசாலைகளின் பகல் உணவு வேலைத்திட்டத்தை நகர பாடசாலைகளிலும் வழங்க உதவிகளை வழங்க விருப்பதாகவும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார். (அ)

## சீன பாய்மர...

மா வேன்யோங் நேற்று மேற்கு கடற்படை கட்டளை தளபதி ரியர் அட்மிரல் சிந்தக குமாரவை சந்திக்கவுள்ளார்.

இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சித் தொடரில் இரண்டு கடற்படையினர், பணியாளர்கள் பங்கேற்கவுள்ளனர். அத்துடன் கப்பலின் பணியாளர்கள் கொழும்பில் தங்கியிருக்கும்போது, நாட்டின் சில சுற்றுலாத்தளங்களை ஆராய்வதுடன் இலங்கை கடற்படை வீரர்களுக்கு கப்பலின் செயற்பாடுகள் குறித்த விளக்கக் காட்சியில் பங்கேற்கவும் வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வாசுதேவ...

நிலையில் எங்கள் கட்சி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளது. நாங்கள் தேர்தலில் போட்டியிடும் அதேவேளை, அவர்களுக்கு ஆதரவளிப்போம்.

ஜனாதிபதித் தேர்தலின்போது, தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயல்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார். (அ)

## ஜனாதிபதி...

அமெரிக்க - இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிப்பதாகவும் பிராந்தியத்திற்கு நன்மை பயக்கும் மற்றும் ஜனநாயகக் கொள்கைகளைப் பாதுகாக்கும் முன்னெடுப்புகள் தொடர்பில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்பட தயாராக இருப்பதை இந்த வாழ்த்துச் செய்தி எடுத்துக்காட்டுவதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## பல இலட்சம்...

இந்நிலையில் வீதியால் சென்றவர்கள் அந்த நாணயத் தாள்களை எடுத்துச் சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

இது குறித்து சந்தேகநபரின் மனைவி வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் 42 வயதுடைய, 3 பிள்ளைகளின் தந்தையான குறித்த நபரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள்மீது நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுப்போம்!

## அமைச்சர் விஜித ஹேரத் உறுதி



கொழும்பு, ஒக். 09

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடைய மற்றும் வழிநடத்தியவர்களுக்கு எதிராக நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரிக்க விசேட தலையீட்டை ஆரம்பித்துள்ளோம். அதற்காக இடம்பெற்ற விசாரணைகள் ஊடாக இந்த அறிக்கை காணாமல் போனது எப்படி? அவற்றின் பக்கங்கள் எவ்வாறு தொலைந்து போனது என்பது தொடர்பாக விசாரித்து வருகிறோம்.

ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில், முன்னாள் சட்டப் பணிப்பாளர் தலையிட்டு தான் இந்த விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கியிருந்தார். அப்படியானால் அந்த அறிக்கையின் சில பகுதிகள் எப்படி தொலைந்து போனது? ஒப்படைக்கும் போது இருந்தனவா? அதன் பிறகு என்ன நடந்தது? இதையெல்லாம் இந்த ஆய்வுக் குழு விசாரித்து வருகிறது. எனவே" இந்த நாட்டு மக்களுக்கு எந்த அநீதியும் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை-என்றார். (அ)

# திங்கள் முதல் உர மானியம்!

கொழும்பு, ஒக். 09

நெல் விவசாயிகளுக்கான 25 ஆயிரம் ரூபாய் உர மானியம் வழங்கும் திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெரும் போகம் ஆரம்பமாகவுள்ளது. அடுத்த வாரம் திங்கட்கிழமைக்குள் இந்த உர மானியம் அம்பாறை மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும். அதன் பின்னர் பொலன்னறுவை, அநுராதபுரம், மஹியங்கனை மற்றும் மகாவலி பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு இதனை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்-என்றார். (அ)

# பிணைமுறி மோசடி விடயம்: ரணிலை நீதிமன்றுக்கு அழைக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 09

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நீதிமன்றத்துக்கு கொண்டு வர தேவையான நகர்வுகள் முன்னெடுக்கப்படு வருகின்றன என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிச்சயமாக நாம் நாட்டின் ஊழல் மோசடிகளை நிறுத்த நடவடிக்கை எடுப்போம். அந்த விடயத்தில் எந்த மாற்றமும் இல்லை. நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். அதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், அதற்காக எவரையும் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்போவதும் இல்லை. தோல்வி அடைந்த அரசியல்வாதிகளை பழிவாங்குதல் மற்றும் அவர்கள் ஆட்சியில் இருக்கும் போது செய்த செயல்பாடுகளுக்காக பழிவாங்குதல் போன்ற விடயங்களை நாம் மேற்கொள்ளப்போவதில்லை.

உறுதியான ஆதாரங்கள் மற்றும் சாட்சியங்களுடன் இந்த நாட்டின் சட்டத்திற்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மத்தியவங்கி பிணைமுறி மோசடி விடயத்திலும் அத்தகைய நடவடிக்கையே மேற்கொள்ளப்படும். மத்திய வங்கி பிணை முறி மோசடி 2015 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த சயமத்திலேயே மத்திய வங்கி பிணை முறி மோசடி இடம்பெற்றது.

அந்த தருணத்தில் மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜூன் மகேந்திரன் இருந்தார். ஆகவே அவரிடம் பிணை முறி மோசடி குறித்த விசாரணையின் போது அர்ஜூன் மகேந்திரன் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமையவே இந்த விடயத்தை மேற்கொண்டதாக கூறியுள்ளார். அதனை தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையினால் கோப் குழுவும் இரத்தாகியது. அதனை நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

அதனை தொடர்ந்து ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அதன் ஊடாக வழக்கு தொடரப்பட்டது. அதற்கமைய முன்னர் அவர் ஜனாதிபதியாக இருந்தமையினால் விடுபாட்டுரிமை இருந்தது.ஆனால் அந்த விடுபாட்டு உரிமை தற்போது இல்லை. ஆகவே ரணில் விக்கிரமசிங்கவை தற்போது எம்மால் நீதிமன்றத்திற்கு அழைக்க முடியும். அதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அப்போதைய அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் அந்த வழக்கு விசாரணைகளின்போது அவசியம் வருகை தர வேண்டும் அவ்வாறு அவர்கள் இன்றி விசாரணை மேற்கொண்டால் நியாயத்தை பெற்றுக்கொள்ள முடியாது.

நாம் ஊழல்வதிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது மாத்திரமல்லாது மீண்டும் அத்தகைய மோசடிகள் இடம் பெறாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டியதும் அவசியமாகவுள்ளது-என்றார். (அ)

# இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்துக்கு வடக்கில் மூன்று அதிகாரிகள் பதவி உயர்வு







யாழ்ப்பாணம், ஒக். 09

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் அரச அதிகாரிகள் மூன்று பேர் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பொதுச் சேவைகள் ஆணைக்குழு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கடமையாற்றும் ம. பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக கடமையாற்றும் எம்.நந்தகோபாலன், யாழ். மாவட்ட பதில் அரச அதிபராக கடமையாற்றும் எம். பிரதீபன் ஆகியோரே இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

01-07.2024 நடைமுறைக்கு வரும் வகையில் இவர்களுக்கு இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

# சந்தையில் நச்சுப் பொருட்கள் அடங்கிய தேங்காய் எண்ணெய்!

கொழும்பு, ஒக். 09

தேங்காய் எண்ணெய் சந்தையில் நச்சுப் பொருட்கள் அடங்கியிருப்பது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், உற்பத்தியாளர் என்று குறிப்பிடப்பட்ட லேபிளுடன் தேங்காய் எண்ணெயை கொள்வனவு செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுப்பதாக சங்கத்தின் அழைப்பாளர் புத்திக டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் தரம் வாய்ந்தது என பொது சுகாதாரத் தலைவர் ஒருவர் தவறான கருத்தை வெளியிட்டுள்ளதாகவும், அவர் கூறியிருப்பது மக்களை தவறாக வழிநடத்தும் செயல்பாடு எனவும் குறிப்பிட்டார். (அ)

# பால் விலை உயரும்

கொழும்பு, ஒக். 09

உள்நாட்டு உற்பத்தி பாலின் விலை விரைவில் அதிகரிக்கும் என அகில இலங்கை விவசாயிகள் சங்க செயலாளர் நாமல் கருணாரத்ன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த அரசாங்கம் பாலின் விலையைக் குறைத்தமை காரணமாக பால் உற்பத்தியாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டனர்.

இந்நிலையில் உள்ளூர் உற்பத்தி பாலின் விலையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

மிக விரைவில் பசும்பாலின் விலை அதிரிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது - என்றார். (அ)

# கடந்த அரசின் ஊழல்களுக்கு ஆதாரம் கோரும் தே. ம. சக்தி



கொழும்பு, ஒக். 09

நாட்டில் கடந்த அரசாங்கங்களில் இடம்பெற்ற ஊழல் - மோசடிகள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைக்கப்பெறுமாயின் ஊழலுக்கு எதிரான அமைப்புக்கு வழங்குமாறு குறித்த அமைப்பின் அழைப்பாளர் வசந்த சமரசிங்க பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி கொள்ளையர்களுடன் எவ்வித உறவையும் பேணாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த மாதம் 23ஆம் திகதி அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து 24ஆம் திகதி மிகச்சிறிய அமைச்சரவையை நியமித்து மக்கள் எதிர்பார்த்தவாறு நிதி முறைகேடுகள் செய்தவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த ஆரம்பித்துள்ளார்.

புதிய அரசாங்கம் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு பொதுமக்கள் வழங்கும் தகவல்களும் மிகவும் முக்கியமானவையாகும். அந்தத் தகவல்களின் மூலம் நிதி முறைகேடுகள் மற்றும் சட்டவிரோத வேலைகளைச் செய்த நபர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாக எவ்வாறு சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது என்பதை பொதுமக்கள் அவதானிக்க முடியும்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தமக்கு எதிராக சட்டத்தை விரைவில் அமுல்படுத்துமாறு கோரி வருவதாகவும், அவசரப்படாமல் ஆதாரங்களுடன் தகவல்களைப் பெற்ற பின்னரே இதனைச் செய்ய வேண்டுமென்பதனால் முறையாகச் செய்வதற்கு சிறிது காலம் பிடிக்கும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org